**விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்திச் செயற்திட்டம் - 2022**

---

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆம் திகதிய 3698 எஸ்ஆர்ஜ மற்றும் 3699 எஸ்ஆர்ஜ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் கல்வி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சாகவிருந்த தற்போதைய கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் களனி, ரஜரட்ட, சபரகமுவ மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. நாட்டின் உயர்கல்வி முறைமையில் வேலைவாய்ப்பு சார்ந்த தொழில்நுட்ப பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அணுகல் வசதிகளை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் ஆரம்ப மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 26,400 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 165 மில்லியனானதுடன் அதில் ரூபா 23,200 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 145 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. ரூபா 3,200 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 20 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஏப்ரல் 17 இல் முற்திகதியிடப்பட்ட நிதியளிப்பின் கீழ் ஆரம்பித்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் 2022 ஆம் ஆண்டிற்கான செலவினக்கூற்றையும் அத்திகதியில் முடியவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டம் 05 செயற்திட்டக் கூறுகளின் கீழ் 2018 ஏப்ரல் 17 இல் அதன் செயற்பாடுகளைத் தொடங்கியிருந்ததுடன் இது 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து 04 வருடங்களும் 08 மாதங்களும் கடந்த பின்னரும் முறையே 68 வீதம் மற்றும் 43 வீதமாக இருந்தது. எனினும், மீளாய்வாண்டில் இச்செயற்திட்டம் 15 சதவீத முன்னேற்றத்தை மாத்திரமே அடைந்திருந்தது. எனவே, செயற்திட்டத்தின் கூறுகள் ரீதியான முன்னேற்றம் பின்வருமாறுள்ளன.

| இல. | கூறு | 2022.12.31 இல் உள்ளவாறான பௌதீக செயலாற்றல் | | 2022.12.31 இல் உள்ளவாறான நிதி செயலாற்றல் | | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் (%) | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் (%) | எதிர்பார்க்கப்பட்ட செயலாற்றல் (%) | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் (%) | | |
| (அ) | தொழில்நுட்பக் கல்வி, கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சிக்கான பீட கட்டிடங்கள் மற்றும் வசதிகளை வடிவமைத்து, நிர்மாணித்தல் மற்றும் செயற்படுத்துதல். | 75 | 71 | 70 | 60 | கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, இறக்குமதி மீதான அரசாங்கத்தின் கட்டுப்பாடு என்பன செயற்திட்டத்தின் முன்னேற்றத்தை மோசமாகப் பாதித்திருந்தன. எனினும், பௌதீக மற்றும் நிதி செயலாற்றலை திருப்திகரமான மட்டத்தில் முகாமை செய்ய முடிந்தது. | ஒப்பந்ததாரர்கள் பணிகளை விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உயர்தர மற்றும் வேலைவாய்ப்பு சார்ந்த தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பாடத்திட்டங்களை உருவாக்குதல் மற்றும் அமுல்படுத்துதல் | 70 | 65 | 38 | 28 | கொவிட் காலத்தில் பயணக் கட்டுப்பாடுகள் மற்றும் பல்கலைக்கழகங்களின் கல்விசார் பதவியணியினர் பற்றாக்குறை காரணமாக நீண்டகால பயிற்சிகள் தொடங்குவது தாமதமாகியிருந்தது. செயற்திட்ட காலப்பகுதியினுள் பூர்த்திசெய்வதற்கு 20 கல்வியாளர்களுக்கு மாத்திரமே PhDs மற்றும் MScs ஐ வழங்க முடிந்தது. அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் காரணமாக வெளிநாட்டு குறுகிய காலப் பயிற்சி இரத்துச் செய்யப்பட வேண்டியிருந்ததுடன் முதுமானி பயிற்சி நிகழச்சித்திட்டத்தின் பிரகாரம் ஏனைய பயிற்சிகள் நடாத்தப்படுகின்றன. | எதிர்பார்த்த இலக்குகளை அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| (இ) | அமுல்ப்படுத்தும் முகவர்கள் மற்றும் தொழில் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான இணைப்புக்கள், ஒத்துழைப்புக்கள் மற்றும் பங்குடமையை வலுப்படுத்துதல். | 60 | 50 | 10 | 05 | தெரிவுசெய்தலின் நீண்ட நிர்வாக செயன்முறை மற்றும் சர்வதேச பல்கலைக்கழக ஒத்துழைப்பின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றின் காரணமாக அமுல்ப்படுத்துவதற்கு கணிசமான கால அவகாசம் எடுக்கிறது. | இலக்குகளை அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்திற்கான கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் 2023 யூலை 22 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டதுடன் 2023 ஆகஸ்ட் 26 வரை நீடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 68 சதவீத இலக்கு பௌதீக முன்னேற்றத்தில் 25.63 சதவீதம் மாத்திரமே 30 மாத ஒப்பந்த காலப்பகுதியிலிருந்து 24 மாதங்கள் கடந்த பின்னரும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடைந்துகொள்ளப்பட்டுள்ளது. எனவே, 74.37 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற குறிப்பிடத்தக்க அளவு மிகுதி வேலை மீதமுள்ள ஒப்பந்த காலப்பகுதியிலிருந்து ஏழு மாதங்களுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | ஒப்பந்ததாரரின் காசுப்பாய்ச்சல் பிரச்சனையால், நிர்மாண முன்னேற்றம் இலக்கின் பிரகாரம் காணப்படவில்லை. பணியை தொடர்வதற்கு மேலதிக முற்பணம் கோரப்பட்டுள்ளது. கோரிக்கை ADB இற்கு அனுப்பப்பட்டு அது செயற்படுத்தப்பட்டு வருகிறது. | ஒப்பந்த பணிகளை விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்திற்கான கட்டிடத்தின் நிர்மாணம் 2021 ஒக்தோபர் 25 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2024 ஏப்ரல் 24 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது, இது 2023 திசெம்பர் 31 இல் செயற்திட்ட காலப்பகுதிக்கு அப்பால் உள்ளது. முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 48 சதவீத இலக்கு ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றத்தில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 25 சதவீதம் மாத்திரமே அடைந்துகொள்ளப்பட்டது. 75 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மிகுதி நிர்மாணப் பணி 16 மாதங்களுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக நிர்மாணப் பணிகளை தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. தற்போது அது செயற்பாட்டில் உள்ளதுடன் உண்மையான முன்னேற்றம் 2023 மே 31 இல் உள்ளவாறு 81% இலக்குக்கு எதிராக 43% ஆக உள்ளது. | ஒப்பந்த பணிகளை விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்திற்கான கட்டிடத்தின் நிர்மாணப் பணிகள் 2020 திசெம்பர் 10 இல் தொடங்கப்பட்டு 2023 யூன் 19 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. பின்னர் அது 2023 யூலை 13 வரை நீடிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் ஒப்பந்தத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 2022 திசெம்பர் 31 இல் | மேற்குறிப்பிட்ட பிரச்சனைகளால் தாமதம் ஏற்பட்டது. எனினும், 2023.05.31 இல் உள்ளவாறான உண்மையான முன்னேற்றம் 99% எதிர்பார்க்கப்பட்ட இலக்குக்கு எதிராக 96% | பணிகளை விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, கால எல்லைக்குள் பூர்த்தி செய்யப்படுவதற்கு ஒப்பந்ததாரர்களின் பணிகளை |

| | | |
|---|---|---|
| உள்ளவாறு இலக்கிடப்பட்ட 97 சதவீத பௌதீக முன்னேற்றத்தில் 88 சதவீதம் அடைந்துகொள்ளப்பட்டது. எனினும், மிகுதி பணிகள் மீதமுள்ள ஏழு மாத ஒப்பந்த காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. | ஆகும். | உன்னிப்பாகக் கண்காணித்தல் வேண்டும். |

**2.3 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|
| கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டம் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது. எனினும், கடன் வழங்கும் முகவரால் மேற்கொள்ளப்பட்ட 87.9 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 145 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் செயற்பாடுகளை தொடங்கிய திகதியிலிருந்து 04 ஆண்டுகளும் 8 மாதங்களும் கடந்த பின்னரும் 40.93 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 59.36 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தன. மேலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்படாத கடன் மீதி மீது ரூபா 73.54 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 0.36 மில்லியன் கடப்பாட்டுக் கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளன. எனவே, 59.07 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற 85.64 மில்லியன் பயன்படுத்தப்பட்டதுடன் மீதமுள்ள செயற்திட்டக் காலப்பகுதியின் 12 மாதங்களுக்குள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வது கணக்காய்வின் போது ஐயப்பாட்டிற்குரியதாகும். | மேற்குறிப்பிட்ட அனைத்து பிரச்சனைகளும் இந்த சூழ்நிலையை பாதித்திருந்தன. | செயற்திட்ட காலப்பகுதியினுள் பூர்த்தி செய்வதற்கு அதிகபட்ச முயற்சி எடுக்கப்பட வேண்டும். |